RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1838

# கலம்பக உறுப்புகளில் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள்

**ச. கோவிந்தம்மாள் [அ, *], கதி. முருகேசன் [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா.

# Specialties of protagonists in Kalambagam

**S. Govindammal [a, *], KT. Murugesan [a]**

[a] Department of Tamil, Ganesar College of Arts and Science, Melasivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author: govindammal74@gmail.com

Received: 15-07-2022
Revised: 30-10-2022
Accepted: 06-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Kalambagam is one among the ninety-six types of literature. Kalambagam is composed of two subjects called Agam and Puram. Kalambagam reveals the excellence of the protagonist. Eighteen Kalambagam elements such as vandu, tavam, puyam, ammanai, osal, maram, kalam, sampratham gives two meanings. In general, they express the characteristics of the Kalambagam elements and in special way it expresses the excellence of the protagonist. The purpose of Kalambagam is to give the characteristics of the protagonist.

**Keywords:** Kalambagam, Protagonists, Specialties, Agam and Puram

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலம் சிற்றிலக்கியக்காலம் என்று அழைக்கப்படுகிறது. பேரிலக்கியங்கள் தோற்றம் பெற்ற சோழர் காலத்தை ஒத்து இக்காலத்தில் வளமான இலக்கியங்கள் தோன்றுவதற்கான சூழல் இல்லை. அதனால் புலவர்கள், வள்ளல்கள், சிற்றரசர்கள், சமீன்கள் முதலியோரைச் சார்ந்து வாழ வேண்டிய சூழலுக்கு ஆளாயினர். இக்காலத்தில் பேரிலக்கியங்கள் தோன்றுவதற்குப் பதிலாகச் சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவை புலவர்களால் தங்களை ஆதரித்த புரவலர்களைப் போற்றும் வண்ணம் அமைந்தன. சிற்றிலக்கியக் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கிய வகைகளுள் அகமும் புறமும் கலந்து வரப்படைக்கப்பட்ட இலக்கியங்களுள் ஒன்றாக விளங்குவது கலம்பக இலக்கியம். இவ்விலக்கியத்தில் இடம்பெறும் கலம்பக உறுப்புகள் தலைவனின் சிறப்புகளை எடுத்துக்கூறும் நோக்கில் அமைந்திருக்கின்றன. பாட்டுடைத் தலைவனின் சிறப்பை விளக்க வந்த புலவர்கள் அதனை இலக்கியத்தில் இடம்பெறும் உறுப்புகளின் வழியாக விளக்குகின்றனர். அவ்வகையில் இக்கட்டுரை கலம்பக உறுப்புகள் விளக்கும் பாட்டுடைத் தலைவனின் சிறப்பை ஆராய்கிறது.

## கலம்பகம் - விளக்கம்

கலம்பகம் “கலம் + பகம் (12 + 6) எனப் பிரித்து உம்மைத்தொகையாகக் கொண்டு பதினெட்டு உறுப்புகளால் ஆன நூல் என்று பொருள் கொள்ளும் வழக்காறு இருந்து வருகிறது”. இவ்விலக்கியத்தை, “கலவை இலக்கியம் என்று கொள்ளுவது பல்லாற்றானும் பொருந்துவதொன்றாகும் (Subramaniyan & Bhagavathi, 1983). இவ்வாறு கொள்ள கலப்பு + அகம் என்று பிரிக்கலாம். கலப்பைத் தன்னகத்தே கொண்ட

ஓர் இலக்கியம் என வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகப் பொருள் விளங்கும்" (Subramaniyan & Bhagavathi, 1983). கலம்பகம் என்னும் சொல் கலப்பு என்னும் பொருள் கொள்ள அமைவதாகும். பெரும்பாணாற்றுப்படை நச்சினார்க்கினியர் உரையில், "பல்பூமிடைந்த படலைக்கண்ணி என்னும் தொடருக்குப் பல்பூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை" என்று பொருள் கூறப்பட்டுள்ளது (Subramaniyan & Bhagavathi, 1983). "பல வகை வண்ணமும் வடிவும் வாசமும் நிறைந்த மலர்களைக் கலந்து தொடுக்கப்பட்ட பூமாலையைக் கதம்பம் என்றார் போலப் பல வகை உறுப்பும் பல வகைப் பொருளும் பல்வகைச் செய்யுளால் கலந்து பாடப்பெறும் சிற்றிலக்கியம் கலம்பகம் எனப்பட்டது". "பல வகை மலர்களால் தொடுக்கப்படும் பூமாலை போன்று பல்வகைப்பாக்களால் தொடுக்கப்பெறும் பூமாலையாகும் (Pillai Perumal Iyengar, 2007). கலப்பு + அகம் என விரியும். கலப்பு என்பது மெலித்தல் விகாரம் பெற்று கலம்பு என நின்றது. கலம்பக உறுப்பாக அமையும் துறை பலவும் கலத்தலைத் தன்னகத்தே கொண்ட நூல் எனப் பொருள்படும்" மேற்கண்ட கருத்துகளின் வழிப் பல வண்ண மலர்கள் கலந்து கட்டப்பட்ட மாலை கதம்பம் என்று அழைக்கப்படுதல் போலப் பல பா வகைகளும் உறுப்புகளும் அக புறப் பொருள்களும் கலந்து படைக்கப்படுவது கலம்பகம் எனக் கொள்ளலாம் (Kannan, 2002).

## கலம்பக இலக்கியத்தின் அமைப்பு

கலம்பக இலக்கியம் பல்வகைப் பா வகைகள் உறுப்புகள் அகம் புறம் கொண்டு கட்டமைக்கப்படுவது. இவ்விலக்கியத்தின் அமைப்புக் குறித்து இரா. கண்ணன், "கலம்பக இலக்கியத்தின் தொடக்கத்தில் அமைய வேண்டுவனவாகிய ஒருபோகு, வெண்பா, கலித்துறை ஆகியவை முதலுறுப்புகள் அல்லது யாப்புறுப்புகள் என வழங்குதல் மரபு. இவ்வுறுப்புகள் முதல் உறுப்புகள் என்றமையாமல் பின்வரும் புயம், அம்மானை முதலானவற்றைத் துணை உறுப்புகள் எனக் கொள்ளுதல் வேண்டும். இத்துணை உறுப்புகள் அவ்வவற்றின் பாடற் பொருண்மையால் பெயர் பெற்றிருத்தலால் இவற்றைப் பொருளுறுப்புகள் என்று அழைக்கலாம்" என்றவாறு குறிப்பிடும் கருத்து இலக்கிய அமைப்பினைப் புரிந்துகொள்ள உதவுகிறது (Kannan, 2002). இலக்கியத்தில் பயின்று வரும் கலம்பக உறுப்புகள் பல்வேறு பொருண்மைகளில் அமைகின்றன. கலம்பக இலக்கியங்களில் புயம், அம்மானை, ஊசல் முதலான உறுப்புகள் இடம் பெறுகின்றன. "முதல் கலம்பக இலக்கியமான நந்திக்கலம்பகத்தில் பதினேழு கலம்பக உறுப்புகள் இடம்பெறுவதாக" குறிப்பிடுகிறார் (Kathir Murugu, 2007).

## கலம்பக உறுப்புகள்

கலம்பக இலக்கியங்கள் பிற இலக்கியங்களில் இருந்து மாறுபட்டுப் பல்சுவை உடையனவாக விளங்குகின்றன. குறிப்பாக, அக மரபுகளும் புற இலக்கியத்திற்குச் சுவை ஊட்டும் பண்புகளாக அமைந்திருக்கின்றன. பாட்டியல் நூல்களில் பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம் முதலான பாட்டியல் நூல்கள் கலம்பக இலக்கியங்களில் இடம்பெற வேண்டிய உறுப்புகளை வரையறுத்துக் கூறியுள்ளன. "புயம், தவம், மதங்கு, அம்மானை, காலம், குறம், மறம், களி, மடக்கு, ஊசல், வண்டு, ஊர், சித்து, சம்பிரதம், தழை, பாண், கைக்கிளை, தூது" (Arunachalam, 1976) என்னும் உறுப்புகளைப் பிரபந்த மரபியலும் "புயம், தவம், மதங்கு, அம்மானை, காலம், குறம், களி, சம்பிரதம், மறம், பாண், கார், தூது, வண்டு, தழை, கைக்கிளை, ஊசல்" என்னும் கலம்பக உறுப்புகளைச் சிதம்பரப் பாட்டியலும் குறிப்பிடுகின்றன (Raghava Iyengar, 1911). கலம்பக உறுப்புகளைக் கூறுவதில் பாட்டியல் நூல்கள் வேறுபடுகின்றன.

## புயம்

"பாட்டுடைத்தலைவனின் தோள்கள் செய்த செயற்கரும் செயல்களை விளக்குவது புயம் என்னும் உறுப்பு" புய வகுப்பு என்னும் கலம்பக உறுப்பு ஆசிரிய விருத்தத்தால் அமையும் (Kathir Murugu, 2007). கழிநெடிலடி கொண்டு அமையும் புயவகுப்புப் பாடல் மிகுதியான சீர்களை உடையதாகப்

படைப்பாளரின் படைப்புத் திறனுக்கு வழியமைப்பதாக விளங்குகிறது. புயவகுப்புப் பாடல் மிகுதியான சீர்களை உடையதாகப் படைப்பாளரின் படைப்புத் திறனுக்கு வழியமைப்பதாக விளங்குகிறது. புயவகுப்புப் பாடல் எல்லா இலக்கியங்களிலும் ஒன்று போல அமையாமல் நூலாசிரியரின் படைப்புத்திறனுக்கு ஏற்றவாறு அமைகின்றன. நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும்

“மறமத கரி திசை நிறுவின மணிநகையவர்மனம் நகுவன

விறல் அரசர்கள் மனம் நெகிழ்வன விரைமலர் களி முலை பொருவன

திறல் உடையன தொடை புகழ்வன திகழ் ஒளியன புகழ்ததை வன

நறுமலர் அணியணி முடியனநயபர நினதிரு புயமதே”

என்னும் பாடலில் நந்திவர்மனின் தோள்கள் அழகினை எல்லாம் ஒருங்கே கொண்டவை (Kathir Murugu, 2006). அவை வீரத்தையும் மதத்தையும் கொண்ட யானைகளை எல்லா திசைகளிலும் நிறுத்தியது போன்றன, முத்தைப் போன்ற பற்களை உடைய பெண்களின் மனங்களை மகிழ்ச்சியால் மயங்கச் செய்வன, வலிமையான மன்னர்கள் கண்டு அச்சம் கொள்ளத்தக்கன, மகளிரால் தழுவப்படும் இயல்புடையன, வலிமை உடையன, ஒளியுடையன, புகழ் நிறைந்தன என்று வீரச்சிறப்பு, செயல் சிறப்பு ஆகியவை எடுத்துக்காட்டப்படுகின்றன. பாட்டுடைத் தலைவனின் இயல்புகளுக்கு ஏற்பப் புய வகுப்பில் செய்திகள் இடம் பெறுகின்றன. திருவரங்கக் கலம்பகத்தில் இடம்பெறும்

“அருணைய திருங்கழல் பெருமான் புயங்களே

குழைக்கு உறவாய் இசைந்தன பனி நீர் துளைத்தன

திருநீறணிந்தன தலையே வழங்கின தட மார்பு இடந்தன

அதிலே குழைந்தன எனவே வளர்ந்தன

தொடையால் நிறைந்தன சிலை நாண் எறிந்தன

பொரு போர் புரிந்தன தலைமேல் உவந்தன

உரி போர்வை கொண்டன பணியால் மலிந்தன

அழகோடிருந்தன பெருமாள் புகழ்ந்தன”

என்னும் பாடல் திருமாலின் புயங்கள் செய்த அரிய செயல்களை எடுத்துக்காட்டும் வண்ணம் அமைகின்றன (Kathir Murugu, 2006).

## அம்மானை

அம்மானை பெண்கள் விளையாட்டு. “தமிழ்நாட்டு மகளிர் விளையாட்டாகும். மூன்று பெண்கள் அமர்ந்து அம்மானைக் காயை வீசி விளையாடும் விளையாட்டாகும். இது விளையாட்டாக இருந்தாலும், கவிதை புனையும் அறிவுப்பூர்வமான அமைப்புடையதாக இருந்ததால் இவ்விளையாட்டு இலக்கிய வடிவம் பெற்றது” (www.Wikipedia) என்று விக்கிப்பீடியா அம்மானையின் இலக்கணத்தைக் குறிப்பிடுகிறது. எல்லாக் கலம்பக இலக்கியங்களிலும் அம்மானை உறுப்பை விளக்கும் பாடல் கலித்தாழிசையால் அமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் தங்களுக்குள் வினா எழுப்பிப் பாட்டுடைத்தலைவனின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பாங்கில் அமைகிறது. திருவரங்கக் கலம்பகத்தில் “திருவரங்க இறைவன் ஆண், பெண், அலி என்னும் தோற்றம் கொண்டு விளங்குவதையும் சீதையை மணம் செய்ததையும் சீதையை மணம் செய்தது சாபம் என்பதையும்” என்னும் செய்திகள் இரு பெண்கள் வினா எழுப்பி விடை கூறும் முறையில் அமைந்திருக்கின்றன (Kathir Murugu, 2006).

## இரங்கல்

இரங்கல் என்னும் கலம்பக உறுப்பு நந்திக்கலம்பகத்தில் சிறப்பாக அமைந்திருக்கிறது. தலைவனுக்காகக் காத்திருக்கும் தலைவியின் துயரத்தை எடுத்துக்காட்டும் நோக்கில் கடல், பறவை, கழி, வாடை, மாலை ஆகியவற்றை நினைத்துக் காமமிக்க கலி படர்க் கிளவியில் இவ்வுறுப்பு அமைகிறது. பெரும்பான்மையும் கலம்பக இலக்கியங்களில் மனநிலையின் வெளிப்பாட்டுக்கு அஃறிணை பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. வாடைக் காற்று வருத்தம் கொள்ளச் செய்வதையும் கடல் அலைகளில் ஒலி வருத்தம் கொள்ளச் செய்வதையும் பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதனை,

“புயங்களின் பூவைமார் கொங்கு கொங்கையின்
நயங்கொளத் தகுபுகழ் நந்தி கச்சி சூழ்
கயங்களில் கடிமலர் துழாவிக் காமுகர்
பயங்கொளப் புருந்து பருவ வாடையே”
“ஆர்க்கின்ற கடலோதம் ஆர்க்குமாறும்
அசைகின்ற இளந்தென்றல் அசையுமாறும்
கூர்க்கின்ற இளமதியம் கூர்க்குமாறும்
காணலாம் குறுக்கோட்டைக் குறுகா மன்னர்
போர்க்கின்ற புகர்முகத்துக் குளித்த வாளி
பூதலத்தில் வடிம்பலப்பப் பூண்ட வில்லோன்
பார்க்கொன்று செந்தனிக்கோல் பைந்தார் நந்தி
பல்லவர்கோன் தண்ணருள் யாம் படைத்த ஞான்றே”
என்னும் சான்றுகளால் அறியலாம் (Kathir Murugu, 2006).

## காலம்

கலம்பக உறுப்புகளில் ஒன்றான காலம், பொது, சிறப்பு என்னும் நிலையில் அமைகிறது. கார்காலம், குளிர் காலம், முன்பனிக்காலம், பின் பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம் என்னும் ஆறு பருவங்களில் ஒன்றோ பலவோ பாடல்களில் அமைக்கபடுகின்றன. பாடலின் தொடக்கத்தில் காலத்தின் தன்மையும் அக்காலத்தில் தலைவியின் நிலையைக் கூறுவதாகவும் அமைகின்றன. தலைவன் பொருள் தேடிய கடமை முடிந்து வருவதாகக் கூறிய கார்காலத்தில் வரவில்லை என்றால் தலைவி படும் துன்பங்கள் கார்காலத்தின் மீது ஏற்றிக் கூறப்படுகின்றன. நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும்

“பருவ முகில் எழுத்து மழை பொழியும் காலம்
பண்டு உறவாக்கிய தெய்வம் பகையாக்கும் காலம்
ஒருவர் வருவர் என்று வழி பார்க்கும் காலம்
வல்வினையேன் தனி இருந்து வாடும் ஒரு காலம்
ஒருவர் நமக்கு உண்மை சொலி உரையாத காலம்
ஊருறங்க நம்மிருகண் உறங்காத காலம்
இருவரையும் இந்நிலம் விட்டு அழிக்கின்ற காலம்
இராசமன்னன் நந்தி தோன் சேராத காலம்”

என்னும் பாடல் கார்காலத்தில் தலைவி படும் துன்பத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது (Kathir Murugu, 2006).

## மறம்

மறம் என்றால் வீரம் என்பது பொருள்.பாட்டுடைத் தலைவனின் வீரத்தைச் சிறப்பிக்கும் வகையில் மறம் என்னும் கலம்பக உறுப்பு அமையும்.நந்திக்கலம்பகத்தில் நந்திவர்மனின் வீரமும் திருவரங்கக் கலம்பகத்தில் போர் மறவர்களின் வீரமும் எடுத்துக்காட்டப்படுகின்றன.பாட்டுடைத் தலைவனின் வீரச்சிறப்பைப் புகழ்வது இவ்வுருப்பின் தலையாய நோக்கமாகும்.குறிப்பாக மறம் என்னும் கலம்பக உறுப்பு மகள் மறுத்தல் பொருளிலும் அமைகிறது.திருவரங்கக் கலம்பகத்தில் பெண் கேட்டு ஓலை அனுப்பிய மன்னனைத் தூதுவனிடம் இகழும் போக்கில் பாடல் அமைகிறது.இதனை, "பேச வந்த தூத செல்லரித்த ஓலை செல்லுமோ" என்னும் பாடல் விளக்கும் (Kathir Murugu, 2007). அவ்வாறே நந்திக் கலம்பகத்தில் இடம்பெறக்கூடிய "அம்பொன்று வில்லொடிதல்" என்னும் பாடல் நந்தி பெருமானின் வீரச்சிறப்பை எடுத்துக்காட்டு நோக்கில் அமைகிறது (Kathir Murugu, 2006).

## பிற உறுப்புகள்

"தலைவனைப் பிரிந்து அவனது நினைவில் வாடும் தலைவி அஃறிணைப் பொருள்களைத் தலைவனிடம் தூது விடுப்பதாகக் காமமிக்க கலிபடர் கிளவியில் தூது என்னும் கலம்பக உறுப்பு அமைகிறது" (Kathir Murugu, 2007). "மடல் என்னும் கலம்பக உறுப்பு தலைவியின் நினைவில் துயரம் அடைந்திருக்கும் தலைவன் தோழியிடம் தன்னுடைய நிலையைப் பலமுறை எடுத்துக் கூறியும் தெளிவு பெறாத நிலையில் மடல் ஏறித் தலைவியை அடைய நினைக்கும் மனநிலையை எடுத்துக்காட்டும் உறுப்பாகும்" (Kathir Murugu, 2007). "பெண்கள் தலைவனின் புகழ் பாடி ஊசலாடுவது ஊசல் என்னும் கலம்பக உறுப்பாகும். நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும் ஊசல் என்னும் கலம்பக உறுப்பு இடம்பெறும் பாடல் சிறந்த ஓசை நயம் உடையதாகவும் நந்திவர்மன் புகழ் பாடுவதாகவும் அமைந்திருக்கிறது.

"ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்
காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்
காஞ்சிபுரமும்பாடி ஆடாமோ ஊசல்"

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் திருவரங்கக் கலம்பகம் முதலான இலக்கியங்களில் ஊசல் என்னும் கலம்பக உறுப்பு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது (Kathir Murugu, 2007). இதனை,

"வாசக்குழலசைய ஆடி ரூசல்
மகரக் குழையசைய ஆடி ரூசல்"
"திருமாது புவிமாதோடா ரூசல்
திருவரங்கராசரேயாடீ ரூசல்"

என்னும் சான்றுகள் தெளிவுபடுத்தும். தவம் என்னும் கலம்பக உறுப்பு தவத்தை நீக்கிப் பாட்டுடைத் தலைவனை வணங்க வேண்டும் என்பதைப் பொருளாகக் கொண்டது. குறம் என்னும் கலம்பக உறுப்பு பாட்டுடைத் தலைவன் பெயரைக் கூறிக் குறி கூறும் அமைப்பில் அமைந்தது. இவ்வாறாகக் கலம்பக உறுப்புகள் அனைத்தும் பாட்டுடைத் தலைவனுடைய சிறப்புகளை எடுத்துக்காட்டும் வண்ணம் கட்டமைக்கப்பட்டுள்ளன (Kathir Murugu, 2007).

## முடிவுரை

கலம்பக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள கலம்பக உறுப்புகள் பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்கும் நோக்கில் கட்டமைக்கப்பட்டுள்ளன. கலம்பக உறுப்புகளில் அம்மானை, ஊசல், மறம், பாண், மதங்கு, பிச்சியார், கொற்றியார், சம்பிரதம் முதலான உறுப்புகளின் வழியாகப் பிறர் கூறுவதாகத் தலைவனின் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பாட்டுடைத் தலைவனின் அருஞ்செயல்கள், வீரம், கொடைப்பண்பு, இரக்கம், ஆளுமைப்பண்பு, நுண்மான் நுழைப்புலம் முதலியன கலம்பக உறுப்புகளின் வழியாக வெளிக் கொணரப்படுகின்றன. இலக்கிய நயத்தோடு பல்வகைப் பொருள்களுடன் கூறப்படும் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள் கலம்பக இலக்கிய வகையின் சிறப்புக்குக் காரணமாக அமைகின்றன. கலம்பக இலக்கியங்களில் இடம்பெறும் கலம்பக உறுப்புகள் அகம் புறம் என்னும் இரண்டு அடிப்படையில் அமைந்து பாட்டுடைத் தலைவனுடைய சிறப்புகளை எடுத்துக் கூறும் வண்ணம் அமைந்திருக்கின்றன. கலம்பக இலக்கியத்தில் இடம்பெறும் உறுப்புகள் முதல் பாதியில் இலக்கியச் சுவையினையும் பாவின் இறுதியில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பையும் பேசுவனவாக அமைந்திருக்கின்றன.

## References


Arunachalam, M. (1976) Prabantha Marabiyal, Arasinar Kelthisai suvadikal noolgam, Chennai, India.

Kannan, R. (2002) Sitralikkiyam Aarachi Muthal Thoguthi, Appar pathippagam, Chennai, India.

Kathir Murugu, (2006) Nandhik Kalapagam Moolamum Uraiyum, Seethai Pathippagam, Chennai, India.

Kathir Murugu, (2006) Thiranaaivu Nookil Nandhik Kalapagam, Ramaiya Pathippagam, Chennai, India.

Pillai Perumal Iyengar, (2007) Thiruvarangak Kalampagam Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Raghava Iyengar, M. (1911) Chidambarap Paatiyal, Sentamil Press, Madurai, India.

Subramaniyan, S.V., Bhagavathi, K. (1983) Tamil Ilakkiyak Kolkaikal, International institute of Tamil studies, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License